செய்திப் பணிப்பாளர் /செய்திப் பதிப்பாசிரியர் 21.09.2017

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) : ஆகஸ்ட் 2017

### தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

### தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

**தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk**

2017 ஆகஸ்ட் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அமர சதரசிங்க அவர்கள், தே.நு.வி.சு.அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2017 யூலை மாதத்தில் 6.3% இருந்து 2017 ஆகஸ்ட் மாதத்தில் 7.9% ஆக அதிகரித்துள்ளது என தெரிவித்தார். 2016 ஆகஸ்ட் மாதத்தில் நிலவிய குறைந்த விலை மட்டங்களே பணவீக்கத்தில் அதிகரிப்பு பதிவாகியமைக்கான பிரதான காரணமாகும். 2017 ஆகஸ்ட் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே 5.3%, 2.7% ஆக இருந்த அதேவேளை, 2016 ஆகஸ்ட் மாதத்தில் குறிப்பாக உணவு விலைகளில் ஒப்பீட்டுரீதியாக நிலவிய குறைந்த விலை மட்டங்களை பிரதிபலிக்கும் வகையில் 2016 ஆகஸ்ட் மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளிலினதும் பங்களிப்புகள் முறையே 1.8%, 2.6% ஆக காணப்பட்டன.

இருப்பினும், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2017 யூலை மாதத்தில் பதிவாகிய 122.4 இருந்து 2017 ஆகஸ்ட் மாதத்தில் 122.3 ஆக குறைவடைந்துள்ளது. இது, 2017 யூலை மாதத்துடன் ஒப்பிடுகையில் 2017 ஆகஸ்ட் மாதத்தில் 0.1 சுட்டெண் புள்ளி அல்லது 0.1 சதவீத புள்ளி குறைவொன்றைக் காட்டுகிறது. இந்த மாதாந்த மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.25%ஆல் குறைவடைந்தமையும் அத்துடன் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.16%ஆல் அதிகரித்தமையுமாகும்.

உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் குறைவுக்கு காரணம் அரிசி, மரக்கறி, புதிய மீன், கோழி இறைச்சி, சின்ன வெங்காயம், வெள்ளைப்பூடு, தேங்காய் எண்ணெய் மற்றும் மிளகாய்த்தூள் ஆகியவற்றின் விலைகள் குறைவடைந்தமையேயாகும். எனினும், சுட்டெண்ணில் அதிகரித்த செலவுப் பெறுமதிகள் தேங்காய், உருளைக்கிழங்கு, நெத்தலிக்கருவாடு, பெரிய வெங்காயம், பச்சை மிளகாய், எலுமிச்சம்பழம், தேயிலைத் தூள், வாழைப்பழம் மற்றும் மாம்பழம் என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2017 ஆகஸ்ட் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், ‘சுகாதாரம்’, ‘அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் தியக்கமருந்துகள்’, ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’, ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு’, ‘போக்குவரத்து’, ‘ஆடையும் காலணியும்’ அத்துடன் ‘கல்வி’ ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதியின் அதிகரிப்பேயாகும். மேலும், முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் ‘வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்’ மற்றும் ‘தொடர்பாடல்’ ஆகிய பிரிவுகள் பொருட்டு செலவுப் பெறுமதியில் ஓரளவு சற்று அதிகரிப்பு பதிவாகியது. ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’ மற்றும் ‘உணவகமும் ஹோட்டல்களும்’ ஆகிய பிரிவுகளின் செலவுப் பெறுமதியில் இம்மாதம் மாற்றம் எதுவும் காணப்படவில்லை.




**தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)**

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | புள்ளிக்கு புள்ளி பணவீக்க% |
|---|---|---|---|---|
| 2016 | ஓகஸ்ட் | 113.3 | -1.6 | 4.5 |
| | செப்ரெம்பர் | 113.5 | 0.2 | 4.7 |
| | ஒக்ரோபர் | 114.7 | 1.1 | 5.0 |
| | நவம்பர் | 116.6 | 1.7 | 4.1 |
| | டிசம்பர் | 118.0 | 1.2 | 4.2 |
| 2017 | ஜனவரி | 119.3 | 1.1 | 6.5 |
| | பெப்ரவரி | 119.9 | 0.5 | 8.2 |
| | மார்ச் | 119.5 | -0.3 | 8.6 |
| | ஏப்ரல் | 121.0 | 1.3 | 8.4 |
| | மே | 121.8 | 0.7 | 7.1 |
| | யூன் | 123.4 | 1.3 | 6.3 |
| | யூலை | 122.4 | -0.8 | 6.3 |
| | ஓகஸ்ட் | 122.3 | -0.1 | 7.9 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்